**தலைப்பு 120 – மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 120 – மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 23 திகதி மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

1.2 **கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2. **கணக்குகள்**

---

2.1 **ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

அமைச்சினால் வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 9,901.60 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 7,468.09 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 2,433.51 மில்லியன் எனப்படும் 24.58 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டுவருவன | 8,808.88 | 6,932.73 | 1,876.15 | 21.30 |
| மூலதனம் | 1,092.72 | 535.36 | 557.36 | 51.01 |
| மொத்தம் | **9,901.06** | **7,468.09** | **2,433.51** | **24.58** |

2.2 **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய 12001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 30.00 | 24.70 | 18.00 | 19.64 | 85.00 | 65.68 |

2.3 **கணக்காய்வு அவதானிப்பு**

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.1.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 15 செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 97,677,500 இற்கான மொத்த தேறிய நிதியேற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 21 செலவு விடயங்களின் மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் நிதியேற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் சேமிப்பு தேறிய ஏற்பாடுகளில் 50 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சு அளவினைக் கொண்டிருந்தது.

### 3.2 கட்டுநிதிக் கணக்கு

2015 ஜுலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணங்கள் 371(5) இன் பிரகாரம் வழங்கியிருந்த நிமித்த துணைக் கட்டுநிதி குறிப்பிட்ட விடயம் முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டுமெனினும், 18 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 804,293 தொகைக்கான நிமித்தத் துணைக் கட்டுநிதியினைத் தீர்ப்பதற்காக குறிப்பிட்ட விடயம் முடிவடைந்து 20 நாட்கள் முதல் 10 மாதங்கள் வரை காலவீச்சொன்றினை கொண்டிருந்தது.

### 3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.3.1 வருடாந்த பெறுகைகள் திட்டம்

அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட்டு பண்டங்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 18 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந் நிதியேற்பாடுகளைப் பயன்படுத்துவதற்காக 2006 மார்ச் 24 திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டின் சுற்றறிக்கையின் பிரகாரம் கொள்வனவு மேற்கொள்ளும் காலம் குறிப்பிட்டு விரிவான பெறுகைகள் நேரசூசி ஒன்று தயாரித்திருக்கவில்லை.

#### 3.3.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தின் நீடித்திருப்பதற்கு தாக்கத்தினை ஏற்படுத்தும் சட்டவரையறையினுல் வினைத்திறனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்பு ஒன்றினை நிறுவுவதற்கும், குறிக்கோள் சார்ந்து ஒட்டுமொத்த விடயங்களினதும் செயலாற்றுகை ஒன்றினை ஏற்படுத்திக் கொள்ளல் முகாமைத்துவத்தின் முக்கிய பொறுப்பாக காணப்படுவதுடன், அதற்காக உதவி செய்வதற்கு தேவையான செயல்முறையொன்று தயாரித்து அந்த பொறுப்பினை உள்ளகக் கணக்காய்வில் அடங்க வேண்டுமெனினும், முகாமைத்துவத்தினால் இது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் 30 கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பித்திருந்தன. அக் கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காட்டியிருந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை முகாமைத்துவத்தினால் போதியளவினதான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயலாற்றுகை**

2016 வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் முன்னேற்றம் மீதான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) முக்கிய குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளாமை**

சிறுவர் மற்றும் மகளிர் உரிமைகளை பாதுகாப்பதற்காக நல்லாளுகையை உபயோகிப்பதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளவாறு குறிப்பிட்ட தேவைகளை வழங்குதல் மற்றும் கொள்கைகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் என்பன அமைச்சின் பணியாகக் காணப்பட்ட போதிலும், சிறுவர் மற்றும் மகளிர் உரிமைகளை உறுதிப்படுத்தல், பாதுகாத்தல், மேம்படுத்துவதற்காக ஏற்பாடு செய்திருந்த சட்டங்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட கொள்கைகளுக்கு அதிகாரமளித்து செயற்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத முக்கிய கருமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 10,000 முன்பள்ளி ஆசிரியைகளுக்கு மாதாந்தம் ரூபா 250 வீதம் படியொன்று செலுத்துவதற்காக ரூபா 30 மில்லியன் நிதியேற்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை படி செலுத்தப்பட வேண்டிய ஆசிரியைகளை இனங்காண முடியாமையினால் 4,100 முன்பள்ளி ஆசிரியைகளுக்கு மாத்திரம் ரூபா 11.68 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) உதவியற்ற நிலைமைக்கு உள்ளான மகளிர் மற்றும் சிறுவர்களுக்காக நலன்புரி மற்றும் புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல் நடத்துததல் மற்றும் அடைக்களம் வழங்குதல் என்பன அமைச்சின் முக்கிய கருமங்களாக இருந்த போதிலும், 2016 மற்றும் 2017 ஆரம்ப மூன்று மாதங்களில் பத்திரிகைகளின் மூலம் மாத்திரம் அறிவிக்கப்பட்டிருந்த சிறுவர் மற்றும் மகளிர் முகங்கொடுத்துள்ள மகளிர் இம்சைகள் மகளிர் சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களின் எண்ணிக்கை சுமார் 1,251 தொகை காணப்பட்டது. இந்த சம்பவங்கள் தொடர்பாக அமைச்சு எதுவித பங்களிப்பும் செய்திருக்கவில்லை.

(iii) சிறுவர் பாதுகாப்பு மற்றும் உரிமையை உறுதிப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்துவதற்காக ரூபா 67 மில்லியன் தொகை நிதியேற்பாடு செய்திருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை அவற்றில் ரூபா 47.61 மில்லியன் தொகை மாவட்ட செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறு வழங்கியிருந்த ஏற்பாடுகள் தொடர்பாக உரிய மேற்பார்வையொன்று அமைச்சினால் மேற்கொள்ளப்படாமையினால் அந்த ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 29.13 மில்லியன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சேமிக்கப்பட்டிருந்ததது.

(iv) தேசிய மகளிர் குழுவினால் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் மகளிர் இம்சைகளை தவிர்த்தலின் கீழ் 2015 ஆண்டின் போது ரூபா 3.8 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ் நிதியேற்பாடுகளில் இருந்து சிறுவர் தாய்மார்களின் ஆய்வுகள், சைபர் தொழிநுட்பம் மற்றும் மகளிர் இம்சைகள், தோட்டப் பகுதி மகளிருக்கு ஏற்படும் இம்சைகள் தொடர்பாக 03 ஆய்வுகள் மேற்கொள்வதற்காக 2015 ஆண்டின் போது ரூபா 2.92 மில்லியனும், 2016 ஆண்டின் போது ரூபா 0.72 மில்லியனும் செலவிடப்பட்டிருந்தது. இது

தொடர்பாக அறிக்கைகள் 2016 மே மாதத்தில் கிடைத்திருந்த போதிலும் அதன் விதப்புரைகளை செயற்படுத்துவதற்குத் தேவையான நிகழ்ச்சித் திட்டங்களுக்காக திட்டங்கள் தயாரித்திருப்பதாக அறிவித்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அதனைச் செயற்படுத்தியிருக்கவில்லை.

**(இ) நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கன் அமுல் நடத்துதல்**

கர்ப்பிணித் தாய்மாருக்கான போஷாக்கு பொதி நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 7,500 மில்லியன் தொகையும் பால் கிண்ணம் நிகழ்ச்சித் திடடத்திற்கான குறை நிரப்பு மதிப்பீடு ஒதுக்கீட்டின் மூலம் ரூபா 127.9 தொகையும் ஆக நலன்புரி செலவு விடயத்திற்கான ரூபா 7,627.9 மில்லியனிற்கான ஏற்பாடுகள் அமைச்சிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) கர்ப்பிணி தாய்மாருக்கு போஷாக்குப் பொதி ஒன்று வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்**

கர்ப்பிணி தாய்மார்களுக்காக போஷாக்குப் படி வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 7,500 மில்லியன் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 திகதி வரை ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் அவற்றில் ரூபா 5,746 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் அத் திகதியில் உள்ளவாறு ஒவ்வொரு பிரதேச செயலகங்களினால் அதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவு என அமைச்சினால் உறுதிப்படுத்தப்பட்ட செலவு ரூபா 4,354 தொகையாக இருந்தது. இதன் பிரகாரம் ரூபா 1,392 மில்லியனுக்கான வித்தியாசம் ஒன்று வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அவ்வித்தியாசம் 2017 ஜூன் 05 திகதி வரை இனங்கண்டிருக்கவில்லை.

**(ii) பால் கிண்ணம் நிகழ்ச்சித் திட்டம்**

பால் கிண்ணம் நிகழ்ச்சித் திட்டத்திற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் ஒதுக்கத்தின் மூலம் ரூபா 127.9 மில்லியன் நிதியேற்பாடு செய்திருந்த போதிலும், அவற்றில் சுமார் ரூபா 106.43 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. 02 வயது முதல் 5 வயது வரையான வயதினையுடைய சிறுவர்களின் போஷாக்கு நிலையினை உயர்த்துவதற்காக போசாக்குள்ள வயது வந்தோர் உணவுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் எனவும் மற்றும் 100 மில்லி லீட்டர் பாலில் 87.5 மில்லி லீட்டர் தண்ணீர் அடங்கியுள்ளதாக தாய்மார் மற்றும் சிறுவர் சுகாதார பணிப்பாளரினால் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. மேலும், இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் எதிர்ப்பார்த்த போஷாக்கு நிலைமையினை உயர்த்துதல் நடைபெறாவிடினும் 2106 ஆண்டின் போதும் இந்த நிகழ்ச்சித் திட்டம் அமுல் நடத்தப்பட்டிருந்தது.

**(ஈ) மகளிர் அடைக்கள நிலையங்கள்**

மகளிர்களுக்கு எதிராக வீடுசார் வன்முறைகள் பற்றிய ஐக்கிய நாடுகளின் அறிக்கையின் பிரகாரம் இலங்கை மகளிர்களில் 60 சதவீதத்தை விட கூடுதலானவையாக வீடுகள் வன்முறைகளுக்கு ஆளாகுகின்றனர். இந்த நிலைமையினை தவிர்ப்பதற்காக வீடுகள் வன்முறைகளை தவிர்க்கும் சட்டத்தை சட்டவாக்கம் செய்து பாதிக்கப்பட்டோரை இனங்கண்டு அடைக்கலம் வழங்குவதற்கும்,

வியாபாரத்திற்கு ஆளாகிய மகளிர் மற்றும் சிறுவர் பாதிக்கப்பட்டோருக்கு அடைக்களம் வழங்கும் குறிக்கோளுடன் இந்த நிலையங்கள் நிறுவப்பட்டிருந்தது. பத்திரைகளின் மூலம் 1251 பெண்கள் இம்சைகள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இரத்மலானை அடைக்கள நிலையத்தில் மீளாய்வாண்டின் போது பாதிக்கப்பட்டோர் 15 பேருக்கு மாத்திரம் அடைக்களம் வழங்கப்பட்டிருந்தது. மீரிகமை அடைக்கள நிலையத்தின் பாதிக்கப்பட்டோர் எவரும் இருக்கவில்லை. 02 பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் போது சம்பளமாக ரூபா 515,100 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 2015 ஆண்டின் போது இரத்தினபுரி மாவட்டத்தில் ரூபா 10.57 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அடைக்கள நிலையம் 2017 ஜூலை 31 ஆம் திகதி வரை பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் கண்டியில் மகளிர் அடைக்கள நிலையம் ஒன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 10 மில்லியன் 2015 ஜூலை 17 ஆம் திகதி பிரதேச செயலாளருக்கு அனுப்பியிருந்த போதிலும், அந்த நிர்மாண வேலை நிறுத்தப்பட்டவுடன் அந்த ஏற்பாடு வெறிதாகியது என அறிவிக்கப்பட்டது. மேலும், இந் நிலையங்களின் குறைபாடுகள் மற்றும் முன்னேற்றம் மீதான மீளாய்வு நிதி அமைச்சு மற்றும் இந்த அமைச்சின் பங்குபற்றலுடன் மேற்கொள்ளப்படுகின்றது எனக் குறிப்பிட்டிருந்த போதிலும், அடைக்களம் தேவைப்பட்ட பாதிக்கப்பட்டோர் பாரிய அளவானோர் அடைக்களமொன்று இன்றி நாட்டில் இருக்கும் போது அடைக்கள நிலையங்கள் இவ்வாறு வெறிதாக காணப்படுகின்றன என அவதானிக்கப்பட்டது.

**(உ) சுழல் கடன் நிகழ்ச்சித் திட்டம்**

இலங்கை மகளிர் பணியகத்தினால் 1990 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை ரூபா 93 மில்லியன் வழங்கி 304 பிரதேச செயலாளர் பிரிவுகளில் செயற்படுத்தியிருந்த சுழல் நிதி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக 274 பிரிவுகளின் விபரங்கள் மாத்திரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அப் பிரிவுகளுக்கு ரூபா 85.46 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன், 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அவ் வங்கிக் கணக்குகளில் அவற்றில் ரூபா 50.5 மில்லியன் மீதியொன்று காணப்பட்டது. அதன் பிரகாரம் அந்த நிகழ்ச்சித் திட்டம் சுழல் நிதியம் ஒன்றாக செயற்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும், அத் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 34.95 மில்லியனாகக் காணப்பட்ட போதிலும், காணப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 24 மில்லியன் ஆகும். ஆகவே அம் மீதிகள் இரண்டிற்கு இடையே ரூபா 10.8 மில்லியனுக்கான விளக்கமளிக்கப்படாத வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

**3.5 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக 120-01-01-2104 இன் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும் அமைச்சரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் மதில் நிர்மாணிப்பதற்காக ரூபா 3,700,000 இற்கான செலவு ஒன்று செய்யப்பட்டிருந்த போதிலும், அச் செலவினை குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கத்தின் மூலம் 120-01-01-2102 செலவு விடயத்தின் கீழ் அமைச்சரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கான தளபாடங்கள் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக பெற்றிருந்த ரூபா 10,143,000 ஏற்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறை நிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடுகளின் மூலம் நிதியேற்பாடுகள் வழங்கும் போது உட்படுத்தியிருந்த நிபந்தனைகளுக்கு முரணாக அச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என அவதானிக்கப்பட்டன. மேலும், சொத்துக்கள் அசைவு அறிக்கையில் அச் செலவுகள் கட்டிட நிர்மாண வேலை என அன்றி தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தல் என காட்டப்பட்டிருந்தது.

## 3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

அரசியல் துறையில் மகளிர் பங்களிப்பினை மேம்படுத்துவதற்காக ஆறு மாத கால சான்றிதழ் பாடநெறியொன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விவசாய பீடத்தின் கீழ் நடத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக ஒருவருக்கு ரூபா 16,750 வீதம் 40 மாணவிகளுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 670,000 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. அப் பாடநெறிக்காக 73 மாணவிகள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் விரிவுரை காலமாகிய 114 மணித்தியாலங்களில் 76 மணித்தியாலத்தை விட குறைவாக பங்குபற்றிய மாணவிகள் 39 பேர் இருந்ததுடன் 17 பேர் எதுவித விரிவுரைகளுக்கும் பங்குபற்றி இருக்கவில்லை. 32 மாணவிகள் மாத்திரம் சான்றிதழ்களை பெற்றுக்கொண்டிருந்தனர். இவ்வாறான 04 பாடநெறிகள் கடந்த ஆண்டுகளின் போதும் ரூபா 6 மில்லியன் செலவிடப்பட்டு 179 மாணவிகளுக்காக நடத்தியிருந்த போதிலும், 109 மாணவிகள் மாத்திரம் பாடநெறிகளை பூர்த்தி செய்திருந்தார். எனினும் அவர்களில் எத்தனை எண்ணிக்கையானவர்கள் அரசியலில் ஈடுபடுகின்றன என்பது தொடர்பாக தொடல் செயல் நடவடிக்கை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.7 சிறுவர் அபிவிருத்தி நிதியம்

யுத்தச் சூழல் மற்றும் ஏனைய இயற்கை அனர்த்தங்களின் காரணமாக தமது பெற்றோர்களை மற்றும் பாதுகாவலர்களை இழந்துள்ள பிள்ளைகளைப் போலவே பொருளாதார நெருக்கடி காரணமாக தமது கல்வி விடயங்கள் இடையறாது எடுத்துச் செல்வதற்கு மற்றும் பரம்பரை ஆற்றல்கள் மற்றும் ஏனைய திறமைகளை வளர்க்க முடியாதிருக்கும் இலங்கைப் பிள்ளைகளுக்கு நிதி உதவிகளை வழங்குவதை முன்னோடியாகக் கொண்டு சிறுவர் அபிவிருத்தி நிதியம் நிறுவப்பட்டிருந்தது. உத்தேசித்த நிகழ்ச்சித் திட்டம் மிகவும் ஆக்கபூர்வமாக செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும் என 2014 ஜனவரி 24 ஆம் திகதிய அமப/13/1436/528/008-1 இலக்கங் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், 2017 ஜுலை 26 ஆம் திகதிய PFD/SOP/WMCA/001/FD/03 இலக்கங் கொண்ட அரச நிதி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலமும் அனைத்து நிதியங்களையும் மீளாய்வு செய்து தயாரிக்கப்பட்டிருந்த அறிக்கை பொருளாதார முகாமைத்துவம் மீதான அமைச்சரவை குழுவின் (CCEN) மற்றும் அமைச்சரவை அங்கீகாரத்திற்கு அனுப்பியிருந்ததென குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கடந்த ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது கொடிகள் விற்பனை மூலம் மற்றும் நிலையான வைப்புக்களுக்கான வட்டி என கிடைத்திருந்த முறையே ரூபா 1,987,856 தொகை மற்றும் ரூபா 1,996,765 தொகை கிடைத்திருந்த பிரகாரம் சிறுவர்களுக்கு உதவி வழங்குவதற்காக பயன்படுத்தியிருக்கவில்லை.

மேலும், மேற்கூறிய அமைச்சரவை பத்திரத்தின் மூலம் சிறுவர் அடைக்களம் தொடர்பாக குறிக்கோள்களின் நோக்கம் நிறைவேறும் விதமாக நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் போது விஷேடமாக சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகிய சிறுவர்கள், வெளிநாடுகளில் தொழில் செய்யும் பெற்றோர்களின் பிள்ளைகள் மற்றும் விஷேட தேவையுடைய பிள்ளைகள் தொடர்பான விடயங்களுக்கு கூடுதலான கவனம் செலுத்தப்பட்டு வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்ற பின்னர் அந்த செயற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காக இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அதற்காக சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினால் (Save the Children) நன்கொடையாக வழங்கியிருந்த 1,494,000 பிரித்தானிய பவுன்கள் தொகையினை அமைச்சிற்கு வழங்கியிருக்கவில்லை.

## 3.8 ஆரம்ப சிறுபராய அபிவிருத்தித் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உலக வங்கி கடன் உதவியின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருந்த ஆரம்ப சிறுபராய அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 473 மில்லியன் இற்கான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிட்டிருந்தவாறு செயற்படுத்துவதற்கு போதியளவினதாக செயற்பட்டிருக்காமையால் 2016 திசெம்பர் 31 திகதி வரை அவற்றில் ரூபா 357 மில்லியன்களுக்கான நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 14.5 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் ஆரம்ப சிறுபராய அபிவிருத்தி மத்திய நிலைய தொகை மதிப்பினை அடிப்படையாக வைத்து செயற்திட்டத்தின் விடயங்கள் மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் அவ் அறிக்கை 2017 ஜூலை மாதம் வரை கிடைத்திருக்கவில்லை. எவ்வாறாயினும், அதற்காக ரூபா 5.96 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

(இ) தோட்டத் துறையில் ஆரம்ப சிறுபராய அபிவிருத்தி விடயங்களுக்கான பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு (PHDT) உடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 7 வலயங்களைச் (கேகாலை, பதுளை, கண்டி, நுவரஎலிய, ஹட்டன், இரத்தினபுரி மற்றும் காலி) சேர்ந்த பெருந்தோட்டங்களில் ஒரு வலயத்துக்கு 4 வீதம் 28 ஆரம்ப சிறுபராய அபிவிருத்தி நிலையங்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 112 மில்லியன் ஏற்பாடு செய்திருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 திகதி வரை அவற்றின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் ஆரம்ப சிறுபராய அபிவிருத்தி நிலையங்களை பழுதுபார்த்தல் வேலைகள் 35 இல், 13 உம், விளையாட்டு முற்றம் நிர்மாணித்தல் மற்றும் திருத்தவேலை ஒப்பந்த வேலைகள் 77 இல் 46 உம், மீளாய்வாண்டு இறுதி வரை பூர்த்தி செய்திருக்கவில்லை.

## 3.9 பெண்கள் ஆண்கள் சமூகத் தன்மையின் மீது ஏற்படும் இம்சைகளை தவிர்ப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம்

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக 1.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டிருந்தது. 2014, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளின் போது அவற்றில் சுமார் ரூபா 78 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 38.36 மில்லியன் சிறுவர் விவகாரங்கள், விபத்துக்கள் முகாமைத்துவம், பொருளாதார அபிவிருத்தி, கல்வி, வெளிநாட்டு, சுகாதார, நிதி, ஊடக மற்றும் அதிகாரமளித்தல், நிவாரணம் ஆகிய 9 துறைகளை ஒன்றிணைத்து செயற்படுத்துவதற்காக தேசிய செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது. இந்த தேசிய செயல் நடவடிக்கைத் திட்டம் 2016-2020 காலப்பகுதியில் செயற்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டது. இந்த செயற்திட்டத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 12 செயற்பாடுகளை அமுல் நடத்துவதற்காக ரூபா 9.08 மில்லியன் இற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதனை பயன்படுத்தி அச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதே போல் 9 செயற்பாடுகளுக்காக ஏற்பாடு செய்திருந்த ரூபா 6.12 மில்லியன் நிதியேற்பாடுகளில் ரூபா 1.72 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், திட்டமிட்ட அச் செயற்பாடுகளில் 38 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையான அளவு ஒன்றினை நிறைவேற்றியிருந்தது.

## 3.10 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப் பட்ட பதவியணி யினர்** | **உள்ளவாறான பதவியணி யினர்** | **வெற்றிடங் களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 31 | 27 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 17 | 13 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,438 | 1,142 | 296 |
| (iv) | ஆரம்ப நிலை | 86 | 66 | 20 |
| | **மொத்தம்** | **1,572** | **1,248** | **324** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டிருந்த பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஆலோசனை உதவி உத்தியோகத்தர் பதவிகளில் 296 வெற்றிடங்கள் என குறிப்பிடப்பட்டிருந்தாலும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 1142 உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபட்டிருந்தனர். அந்த உத்தியோகத்தரினால் மேற்கொள்ளும் கருமங்கள் தொடர்பாக முறையான தொடர் செயல் நடவடிக்கை மற்றும் மேற்பார்வைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அனுப்பியிருந்த முன்னேற்ற அறிக்கைகளிலும் போதியளவு விடயங்கள் காட்டப்படல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சின் 04 சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் 04 மூன்றாம் நிலை உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டுள்ளமையால் பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்படும் அமைச்சின் கருமங்கள் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, சிறுவர் அபிவிருத்தி நிதியம், சிறுவர் செயலகம், மகளிர் பணியகம், மகளிர் குழு அபிவிருத்தி பிரிவு ஆகியவற்றின் விவகாரங்கள் தொடர்பாக மேற்பார்வை விடயங்கள் உரிய முறையில் மேற்கொள்ள முடியாதிருந்தது.